# <u>கள்ளக்குறிச்சி நகராட்சி</u>

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் அக்டோபர் 2018 மாதம் 30–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திரு,ம,அருண்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொறுப்பு)**
**கூட்ட பொருள்கள்**

பொருள் எண்–01

இந்நகராட்சி மன்ற தீர்மான எண் 139/2017 நாள் : 29.11.2017ன்படி இந்நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் 5KVA UPSக்கு 10 பேட்டரிகள் புதியதாக வாங்கி கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொர்ந்து 10 பேட்டரிகள் புதியதாக வாங்கி பொருத்தப்பட்டு நல்லமுறையில் இயங்கி வரும் நிலையில் 5KVA UPS கடந்த 2013–2014ம் ஆண்டில் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது பழுது ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி பழுதினை நீக்கம் செய்யவும், மேலும் 3 வருடங்களாக 3 மாதங்களுக்கு ஒருமுறை சர்வீஸ் செய்ததற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்ற நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பழுது நீக்கம் செய்யவும், காலாண்டுக்கு ஒருமுறை சர்வீஸ் செய்தமைக்கு பட்டியல் தொகை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / / )**

பொருள் எண்–02

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **குடி□□அ□□ரு□னி னிட்ட□னின்** கீழ், நகரின் முக்கிய பகுதிகளில் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு தரமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் பணிக்கான இயந்திரம் அமைத்தல் பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை தமிழ்நாடு மாநில அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம் அவர்களின் மூலமாக பிரசுரம் செய்ய கோரப்பட்டதில், 21.09.2018 அன்று தினத்தந்தி மற்றும் டெக்கன் கிரானிக்கல் ஆகிய நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதற்கு கீழ்க்காணும் விவரப்படியான தொகைகளை வழங்கக் கோரி வரப்பட்ட பட்டியல்கள் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பிரசுரம் செய்யப்பட்ட நாளிதழ் | பட்டியல் வழங்கப்பட வேண்டிய நிறுவனம் | பிரசுரம் செய்யப்பட்ட நாள் | பட்டியல் எண் / நாள் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | தினத்தந்தி | Kal Publications Pvt. Ltd. | 21.09.2018 | 3300106877 / 21.09.2018 | ரூ. 88259/- |
| 2. | டெக்கன் கிரானிக்கல் | Enthrall Communications Pvt. Ltd. | 21.09.2018 | PB/000488-18-19 / 21.09.2018 | ரூ. 34927/- |

மேற்காணும் விவரப்படி உள்ள பட்டியல்கள்படி உள்ள தொகைகளை அந்தந்த நிறுவனங்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2417 / 2018 / இ1 )**

பொருள் எண்–03

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வந்த ஈப்பு வாகனம் TN32 U 7215 என்ற வாகனம் கடந்த மூன்று ஆண்டுகளாக பயன்படுத்த முடியாத நிலை உள்ளதால், மேற்படி வாகனத்தினை புதுப்பித்து அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்திக்கொள்ளவும். மேற்படி வாகனத்தில் உள்னள பழுதுகளை நீக்கம் செய்ய அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகளில் விலைபுள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ளவும். ஆதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று அரசின் அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகளில் விலைபுள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். /2018 / )**

பொருள் எண்–04

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள வாகனம் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வந்த ஈப்பு வாகனம் TN32 U 5242 வாகனம் கடந்த மூன்று ஆண்டுகளாக பயன்படுத்த முடியாத நிலை உள்ளதால், மேற்படி வாகனத்தினை புதுப்பித்து அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்திக்கொள்ளவும். மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகளில் விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ளவும். அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று அரசின் அங்கீகாரம் பெற்ற மூன்று பணிமனைகளின் விலைபுள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுக்கும் பணிமனையில் விட்டு பழுதுகள் நீக்கம் செய்து தரச்சான்று பெறவும், அதற்கான பட்டியல் தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். அ4 / /2018 / )**

பொருள் எண்–05

அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள்:19/07/2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள்:26/07/2018 ஆகியவற்றில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 01/04/2018–ம் முதல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/RI, நாள்:20/08/2018-ல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள், சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள் ஆகியவைகளின்படி கள்ளக்குறிச்சி நகராட்சியில் 01/04/2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படஉள்ளது.

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76–ன்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய விவரங்களின் பட்டியல்.

| வ. எண். | கட்டடப் பயன்பாடு விவரம் | 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகைகுடியிருப்புகள்) | 50% சதவீதத்திற்கு மிகாமல் |
| 2 | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டடங்கள் | 100% சதவீதத்திற்கு மிகாமல் |

கள்ளக்குறிச்சி நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதன் அடிப்படையில் சொத்துவரி பொதுசீராய்வு செய்யவும், மேற்கண்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியிலுள்ள 237 தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**A, B ,C வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்களின் விபரங்கள்**

| வரிசை எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | A | 141 |
| 2 | B | 84 |
| 3 | C | 12 |
| மொத்தம் | | 237 |

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76: நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/RI, நாள்:20/08/2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் படி 01/04/2018–ம் தேதி முதல் கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து கட்டடங்களுக்கும் சொத்துவரி பொதுசீராய்வு செய்திடவும், இந்நகராட்சி பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தியும், ஒவ்வொரு மண்டலத்திற்கும் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்தும் கள்ளக்குறிச்சி நகராட்சியின் மன்றத் தீர்மான எண். 311, நாள்:07.09.2018-ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு |
| A | 0.50 பைசா | 1.00 ரூபாய் |
| B | 0.30 பைசா | 0.60 பைசா |
| C | 0.20 பைசா | 0.40 பைசா |

மேலும், கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள 237 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி, அம்மண்டலங்களுக்கான அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதை 11.09.2018–ம் தேதிய தினகரன் நாளிதழில் வெளியிட்டும். நகராட்சி அலுவலக விளம்பரபலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தியும், நகராட்சி வலைதளத்தில் வெளியிட்டும், ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் இருந்தால் பொதுமக்கள் ஆணையருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் தெரிவிக்க அறிவிக்கப்பட்டது. ஆனால் அறிவிப்புகள் வெயிடப்பட்டு 30 தினங்கள் 10.10.2018 அன்று முடிவடைந்துள்ள நிலையில் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் எதுவும் வர பெறப்படவில்லை. எனவே கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள 237 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி, ஒவ்வொரு மண்டலத்திற்கும் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்தும் கள்ளக்குறிச்சி நகராட்சி மன்றத் தீர்மான எண்.311, நாள்: 07.09.2018ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி கள்ளக்குறிச்சி நகராட்சியில் 01.04.2018–ம் தேதி முதல் குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சதவீதத்திற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டடங்களுக்கு100% சதவீதத்திற்கு மிகாமலும், சொத்துவரி உயர்வு செய்திட கள்ளக்குறிச்சி நகராட்சி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள 237 தெருக்கள்/சாலைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. அ) A மண்டலத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுரஅடி ஒன்றிற்கு ரூ.0.50 பைசாவிலிருந்து ரூ.1.00 ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

ஆ) B மண்டலத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுரஅடி ஒன்றிற்கு ரூ.0.30 பைசாவிலிருந்து ரூ.0.60 பைசா ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

இ) C மண்டலத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுரஅடி ஒன்றிற்கு ரூ.0.20 பைசாவிலிருந்து ரூ.0.40 பைசா ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

4. இம்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்படும் நாளிலிருந்து கள்ளக்குறிச்சி நகராட்சியில் புதியதாக சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது சொத்துவரி திருத்தியமைக்கப்படும், அனைத்து வகையானக் கட்டடங்களுக்கும் மன்ற தீர்மானத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளபடி மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு சொத்துவரி விதிப்பு செய்யவும், மன்றம் இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண். 1970 / 2018 / அ1**

பொருள் எண்–06

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலை கடைகள் மற்றும் குளக்கரை கடைகளில் கீழ்கண்ட கடைகள் மற்றும் ஆண்டு வாரியாக கேட்பு தொகை நாளது தேதி வரை நிலுவையில் உள்ளது. சூமற்படி கடைகள் அனைத்தும் 01.04.2012 முதல் பொது ஏலம் விடப்பட்டு 2012–2015, 2015–2018 மற்றும் 2018–2021 ஆகிய ஆண்டுக்காக தொடர்ந்து நடப்பட்டு வருவாய் கணக்குப்பதிவேட்டில் ரூ.4,50,602/– 2000–2001 முதல் 2015–2016 வரை நிலுவையில் உள்ள கேட்பு தொகையினை கணினியிலிருந்து நீக்கம் செய்து மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஆண்டு | கேட்பு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2000–2001 | 95551 |
| 2. | 2001–2002 | 57005 |
| 3. | 2003–2004 | 63480 |
| 4. | 2004–2005 | 62216 |
| 5. | 2006–2007 | 9600 |
| 6. | 2011–2012 | 8740 |
| 7. | 2012–2013 | 1050 |
| 8. | 2013–2014 | 24450 |
| 9. | 2014–2015 | 126010 |
| 10 | 2015–2016 | 2500 |
| | **மொத்தம்** | **450602** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரி மற்றும் வரியில்லா இனங்களை நிலுவையில் உள்ள ஆண்டான 2000–2001 முதல் 2015–2016 வரை உள்ள கேட்பினை நீக்கம் செய்ய குழு அமைத்து குழுவின் அறிக்கை பெற்று கேட்பினை நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1477 /2018 / அ2 )**

பொருள் எண்—07

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் 12.10.2018 அன்று பூச்சிகளால் பரவும் நோய் மற்றும் தொற்று நோய்கள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் டெங்கு தடுப்பு பணிக்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) வீடு வீடாக சென்று பணி மேற்கொள்ளும் விதத்தினை ஆய்வு அலுவலர்கள் எளிதில் கண்டறியவும், பணி தரத்தினை உறுதி செய்யவும், கொசுப்புழு இல்லாத வீடுகளுக்கு Smily டோர் ஸ்டிக்கர் ஒட்டி பொதுமக்களை பாராட்டவும் அறிவுறுத்தப்பட்டது.அதன்படி நகராட்சி பகுதியில் உள்ள சுமார் 15000 வீடுகளுக்கு 52 வார வருடாந்திர டோர் ஸ்டிக்கர் கீழ்க்கண்ட விபரப்படி கொள்முதல் செய்யவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.55 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வ் திருச்சி என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிமேற்கொண்டு பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் துப்புரவு ஆய்வாளர் சான்று பெற்றவுடன் பட்டியல் தொகையை நகராட்சி பொது நிதியிலிந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2777 /2018/அ4)**

பொருள் எண்—08

கள்ளக்குறிச்சி நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வரும் ஈப்பு வாகனம் TN15 Y 6671 என்ற வாகனத்துக்கு ஆயில் வர்விஸ் மற்றும் பழுது நீக்கம் செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதால் ஒப்பந்த விலைப்புள்ளிகள் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ் | 9650/— |
| 2. | ஸ்ரீ வெங்கடேஸ்வரா லேபர் ஆட்டோ ஒர்க்ஸ் | 10120/— |
| 3. | ஸ்ரீ தாய் லேபர் ஆட்டோ ஒர்க்ஸ் | 9930/— |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைபுள்ளியிலிருந்து பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3375 / 2018 / எச்1 )**

பொருள் எண்—09

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டிலிருந்த பழுது ஏற்பட்ட பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பொருட்கள் மற்றும் அலுவலக பராமரிப்பு பணிகள் நடைபெற்ற போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பொருட்களை பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். இ1 / /2018 )**

பொருள் எண்–10

அரசாணை எண். 313 நிதி (அகவிலைபடி) துறை நாள். 18.9.2018ம் தேதியில் அரசாணையில் 01.7.2018 முதல் அகவிலைபடி 7% லிருந்து 9% மாத உயர்த்தி வழங்கப்பட்டுள்ளத தொடர்நது 01.7.2018 முதல் 31.8.2018 வரை உள்ள காலத்திற்கு நிலுவைத் தொகயும் 01.9.2018 முதல் ஊதியத்தில் உயர்வு செய்து வழங்க தெரிவித்து வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பில்லுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் பரிசிலிக்கப்பட்டு பதிவுசெய்யலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். /2018/எச்1 )**

பொருள் எண்–11

இந்நகராட்சி மன்ற தீர்மாண எண் 184/2018 நாள். 28.12.2017ன்படி மன்ற தீர்மாண எண் 290/2018 நாள். 30.07.2018யும் இந்நகராட்சியில் ஆண்கள் சுயஉதவிக்குழு வழியே 17 பணியாளர்கள் பணிபுரிந்து வந்த நிலையில் கூடுதலா 3 பணியாளர்கள் நியமனம் செய்து கொள்ளவும் (17+3=20) மேற்படி பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தின் படி நாள் ஒன்றுக்கு ரூ.346/– வீதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் கூடுதலாக சேர்க்கப்படும் 3 பணியாளர்களுக்கு சேர்த்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று புதியதாக (17+3=20) பணியாளர்கள் சேர்த்து கொள்ளவும். ஆதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. புதியதாக சேர்க்கப்படும் பணியாளர்களுக்கு பணியில் சேரும் நாள் முதல் ஊதியம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். /2018 / )**

பொருள் எண்–12

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சொத்துவரி வரிவிதிப்பு தாரர்களுக்கு சொத்துவரி சீராய்வு – 2018க்கான ஆட்சேபனை குறித்து 30 நாட்களுக்குள் தகவல் தெரிவிக்கும் வகையில் பொதுமக்கள் அறியும் வகையில் தினகரன் நாளிதழில் கடந்த 11.9.2018 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.11340/– வழங்ககோரி Kal Publecations என்ற நிறுவனத்தின் வழியே பட்டியல் எண் 3300105377 நாள் : 11.09.2018ல் வரப்பெற்றது. வரப்பெற்ற பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகையினை வழங்குவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். /2018 / )**

பொருள் எண்–13

கள்ளக்குறிச்சி நகராட்சி 2018–2021 (01.04.2018 முதல் 31.03.2021 வரை) ஆம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கடந்த 27.02.2018 அன்று நடைபெற்றது. மேற்படி விளம்பர அறிவிப்பு விழுப்புரம் மாவட்ட அளவில் 10.02.2018 அன்று தினமணி நாளிதழில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம் அவர்களின் மூலமாக பிரசுரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.16,695/– யை வழங்கக் கோரி M/s. எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் பட்டியல் எண்.VPMTN90012301 நாள் 10.02.2018ல் பட்டியல் வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3111 /2018 /அ3 )**

பொருள் எண்–14

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 21 வார்டுகளிலும் டெங்கு நோய் மற்றும் பன்றிக்காய்ச்சல் தடுப்பு பணிக்கு ஏற்கனவே நகராட்சியில் கொசு புழு ஒழிப்பு பணியாளர்கள் 10 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் துணை இயக்குநர், சுகாதார பணிகள் அவர்கள் மூலமாக 15 நபர்கள் பணிபுரிந்து வந்த நிலையில் அவர்களது ஒதுக்கீடு பணிக்காலம் 30.09.2018 உடன் நிறைவு பெறுவதாக துணை இயக்குநர், சுகாதார பணிகள் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2571/2017/ஜெ1, நாள் : 23.04.2018ன் அறிவுரையின் படி உள்ளாட்சி பகுதிகளில் கொசுவினால் பரவும் நோய்களான டெங்கு, சிக்கன்குனியா மற்றும் பன்றிக்காய்ச்சல் அதிகமாக பரவி வருவதை தடுக்கும் பொருட்டு ஒவ்வொரு நகராட்சியிலும் மொத்த வீடுகள் கணக்கீடு செய்து தலா 300 வீடுகளுக்கு 1 நபர் வீதம் DBC கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை பணியமர்த்திக்கொள்ள அறிவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சியில் 21 வார்டுகளில் உள்ள மொத்த வீடுகள் 14285 வீடுகளுக்கு (14285/300=47) 47 நபர்கள் கொசு ஒழிப்பு பணிக்கு பொதுமக்களின் நலன் கருதி பணியமர்த்தி கொள்ளலாம். ஆனால் இந்நகர்மன்ற பகிர்மான எண்.289 நாள் 30.07.2018ன் படி 25 நபர்கள் பணிக்கு அமர்த்தி கொள்ள அனுமதி வழங்கப்பட்டு நகராட்சி பகுதியில் 10 நபர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது மேற்கண்டவாறு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள ஏதுவாக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று 01.10.2018 முதல் மொத்தம் 47 நபர்களை கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு அமர்த்திக்கொள்ளவும், இவர்களுக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலைவிகிதாரசார அடிப்படையில் நாளொன்றுக்கு தொகை ரூ.220/– வீதம் 120 தினங்களுக்கு கூலித்தொகை வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.14.00 இலட்சத்திற்கு பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று 01.10.2018 முதல் 47 பணியாளர்களை பணியமர்த்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 215 /2018/எச்1)**

பொருள் எண்–15

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் நுண்ணுயிரி உரமாக்கும் பணிகள் மற்றும் Onsite Compost பணிகளை நேரடி ஆய்வு செய்த போது இந்நகர் பகுதியில் உள்ள வார்டு எண்.2 வ.உ.சி நகர், வார்டு எண்.12 அண்ணாநகர் மற்றும் வார்டு எண்.15 கரியப்பா நகரில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை சுற்றியுள்ள வளாகத்தில் உள்ள நிலங்களில் மக்கும் குப்பைகளை கொண்டு தயாரிக்கப்படும் உரங்களை கொண்டு மஞ்சள், தென்னங்கன்று, காய்கறிகள் மற்றும் கீரை செடிகள் ஆகியவற்றை பயிரிட அறிவுரை வழங்கப்பட்டது.

அதன்படி மேற்காணும் இடங்களில் டிராக்டர் மூலம் ஏர் ஓட்டி காய்கறிகள் மற்றும் செடிகள் பயிரிடப்பட்டு பராமரிக்கப்படுகிறது. தற்போது இப்பணிகளுக்கான விதைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி. கள்ளக்குறிச்சி அவர்களிடத்தில் கொள்முதல் செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. க்ஷதாடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, கள்ளக்குறிச்சி அவர்களிடம் கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களுக்கான தொகை ரூ.11550/– வழங்கிட கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி இத்தொகையினை இந்நகராட்சி துப்புரவு மேற்பார்வையாளர்கள் திரு.ஆர்.சேகர், திரு.அ.தனபால் அவர்கள் செலுத்தியுள்ளனர். மேற்காணும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து அன்னாருக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இத்தொகையினை இந்நகராட்சி துப்புரவு மேற்பார்வையாளர்கள் திரு.ஆர்.சேகர், திரு.அ.தனபால் அவர்கள் செலுத்தியதையும் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2430 /எச்1 / 2018)**

பொருள் எண்–16

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்7ல் உள்ள சங்கராபுரம் சாலையில் உள்ள தலைமை நீரேற்ற நிலையம் அருகில் உள்ள மின் இணைப்பு எண் 2066 தற்போது பயன்பாடு இன்றி உள்ளதால் அதனை மாற்றி கோட்டைமேடு அருகில் காவல் நிலையம் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் பொருத்திய திரவ குளோரின் இயந்திரத்தை தயார் படுத்த கோரப்பட்டது. மேற்படி இடத்தில் இடமாற்றம் செய்ய இடமாற்றக் கட்டணம் ரூ.2951+59 = 3010 யை வழங்க கோரி உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் ( நகரம் ) கள்ளக்குறிச்சி அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / / 2018)**

பொருள் எண்–17

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் □னி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 26.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளகிள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததரார் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான டி ஒடிசன் மருந்து கொள்முதல் செய்தல் | ரூ. 5,00,000 | M/s. SRI AMMAN TRADERS, Namakkal | ரூ. 700/- ஒரு லிட்டர் குறைவான விலைப்புள்ளி |
| | | | M/s. SHREE PLASTO TECH, Chennai | ரூ. 720/- ஒரு லிட்டர் அதிகமான விலைப்புள்ளி |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், ஒரு லிட்டருக்கு ரூ. 700/- குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள “M/s. SRI AMMAN TRADERS, Namakkal-637001” என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை, பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2381 / 2018 / இ1)**

பொருள் எண்–18

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் பயன்படுத்தி வரும் கணினிகள் – 18 யூனிட்கள் 10 மற்றும் UPS ஆகியவற்றை பராமரிக்கவும். 2018–19ம் ஆண்டிற்கு கணினி உதிரி பாகங்கள் மற்றும் டோனர்கள் வாங்கி கொள்ள இந்நகராட்சி மன்ற தீர்மாண எண் 301/2018 நாள்.28.9.2018ன் படி ரூ.3,00,000/– மூன்று இலட்சத்திற்கு ஒப்புதல் வாங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து உள்ளூரில் விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைபுள்ளிகள் வரப்பெற்று மேற்படி வரப்பெற்ற விலைபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | ஆதவ் சொல்லிசன் | அகல்லா இன்போ டெக் | ராம் |
|---|---|---|---|---|
| 1. | Lip 12 A | 3700 | 3800 | 4000 |
| 2. | Lip 28 A | 5900 | 6000 | 6300 |

**அலுவலக குறிப்பு:-**

1. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஆதவ் சொல்லிசன் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைபுள்ளி அனுமதிக்கலாம்.
2. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / / 2018)**

பொருள் எண்–19

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் □னி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 14.06.2018 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | Preparation of GIS [Geographic Information System] Based Town Map for Kallakurichi Municipality<br>❖ Collecting Ground Control Points for Geo-Referencing the Ward Maps and Road Details and all the required features (Surveying)<br>❖ Geo Referencing of Map<br>❖ GIS Data Validation, Checking for Topology, Map | M/s. HAGROIS, Ambattur, Chennai | ரூ. 498000/- குறைவான விலைப்புள்ளி |
| | | M/s. GEO SCAN, Puducherry | ரூ. 510000/- அதிகமான விலைப்புள்ளி |
| | | M/s. THE ATHENS CHARITABLE AND EDUCATIONAL TRUST, Tiruvannamalai | ரூ. 520000/- அதிகமான விலைப்புள்ளி |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், ரூ. 498000/-க்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள "M/s. HAGROIS, Ambattur, Chennai" என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை, மேற்காணும் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1330 / 2018 / இ1 )**

பொருள் எண்–20

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **குடி□□ □னி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 08.10.2018 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி சங்கராபுரம் சாலை தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள திரவ குளோரினேஷன் சாதனத்தினை பழுது நீக்கம் செய்து கச்சேரி சாலை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் பொருத்துதல் | M/s. SHRI BALAJI AND COMPANY, Salem-636302 | குறைவான விலைப்புள்ளி |
| | | M/s. VASU CHEMICAL INDUSTRIES, Chennai-600097 | அதிகமான விலைப்புள்ளி |
| | | M/s. SRI RAJAGANAPATHY CHEMICALS, Salem-636302 | அதிகமான விலைப்புள்ளி |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில், குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள "M/s. SHRI BALAJI AND COMPANY, Salem-636302" என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை, குடிநீர் விநியோக பணியின் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3579 / 2018 / இ1 )**

பொருள் எண்—21

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் ்னி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 26.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளகிள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **வேலையின்பெயர்** | **மதிப்பீடு தொகை** | **ஒப்பந்ததரார் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான ரெடிமிக்ஸ் மருந்து கொள்முதல் செய்தல் | ரூ. 9,90,000 | M/s. SRI AMMAN TRADERS, Namakkal | ரூ. 650/- ஒரு லிட்டர் குறைவான விலைப்புள்ளி |
| | | | M/s. SHREE PLASTO TECH, Chennai | ரூ. 675/- ஒரு லிட்டர் அதிகமான விலைப்புள்ளி |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், ஒரு லிட்டருக்கு ரூ. 650/- குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள "M/s. SRI AMMAN TRADERS, Namakkal-637001" என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை, பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2381 / 2018 / இ1 )**

பொருள் எண்—22

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்த்திடும் வகையிலும், மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தினசரி குடிநீர் வழங்காததாலும், வார்டு எண். 19ல் பெரியார் நகர் பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. இந்நிலையில், மந்தைவெளியில் அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றில் உள்ள தண்ணீரினை பயன்படுத்தி அருகில் உள்ள பெரியார் நகர் பகுதி பொதுமக்களுக்கு விநியோகம் செய்திட, கள்ளக்குறிச்சி சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் நேரடி ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், பெரியார் நகர் மக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டும், அப்பகுதியில் உள்ள திறந்தவெளி கிணற்று நீரினை பயன்படுத்தி அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு தேவையான நீர்மூழ்கி மின் மோட்டார், கயிறு, குடிநீர் குழாய், பேனல் போர்டு மற்றும் இதர உபகரணங்கள் வாங்கி பொருத்துவதற்கு, தயார் செய்யப்பட்ட உத்தேச தொகை ரூ. 65,000/- (ரூபாய் அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று மூன்று விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.            / 2018 / இ1 )**

பொருள் எண்–23

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட சங்கராபுரம் சாலை தலைமை நீரேற்றும் நிலையத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள திரவ குளோரினேஷன் சாதனத்தின் மூலம் கச்சேரி சாலை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு ஏற்றப்படும் குடிநீரில் திரவ குளோரினேஷன் வழங்கப்பட்டுவந்தது.

தற்போது பம்பு சர்வீஸ் - 2 எண்ணிக்கை (Pump Service) செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் விநாயகா நகர் பகுதியில் அமைந்துள்ள நீருந்து நிலையத்திலிருந்து குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீருக்கு திரவ குளோரினேஷன் அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, சங்கராபுரம் சாலை தலைமை நீரேற்றும் நிலையத்தில் அமைக்கப்பட்டு, தற்போது பழுதடைந்துள்ள திரவ குளோரினேஷன் சாதனங்களை, கச்சேரி சாலை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தினுள்ளேயே பொருத்தினால், உள்ளூர் நீராதார குடிநீர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் பெறப்படும் குடிநீர் ஆகிய இரண்டிற்கும் திரவ குளோரினேஷன் செய்ய இயலும் என்பதால், மேற்படி திரவ குளோரினேஷன் சாதனத்தினை பழுது நீக்கம் செய்து இடமாற்றம் செய்வதற்கும், அதற்காக புதியதாக டெலிவரி லைன்கள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

மேற்காணும் குடிநீர் குளோரின் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருதி விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ. 1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று மூன்று விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3579 / 2018 / இ1 )**

பொருள் எண்–24

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏமப்பேர் நீருந்து நிலையத்தில் ஏற்கனவே இந்நகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள திரவ குளோரினேஷன் சாதனத்தின் மூலம் ராஜாநகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, கேசவலு நகர் நீர்த்தேக்க தொட்டி, தீயணைப்பு நிலையம் நீர்த்தேக்க தொட்டி, அண்ணாநகர் நீர்த்தேக்க தொட்டி மற்றும் கரியப்பாநகர் நீர்த்தேக்க தொட்டிகளுக்கு திரவ குளோரினேஷன் வழங்கப்பட்டுவந்தது.

தற்போது பிரஷ்ஷர் ரிலீஸ் வால்வு (Pressure Release Valve) பழுதடைந்துள்ளது, பம்பு சர்வீஸ் - 2 எண்ணிக்கை (Pump Service) செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. மற்றும் ஆயில் (Oil) இல்லாத காரணத்தினால் பம்பு பழுதடைந்துள்ளது. மேலும், இன்ஜெக்ட்டர்கள் 4 எண்ணம் (Injectors) பழுதடைந்துள்ளதாலும், அதனை மாற்றி புதியதாக பொருத்தப்பட வேண்டி நிலையில் உள்ளது.

மேலும், குளோரினேஷன் தொட்டி வால்வு, டேங்க் பிட்டிங்குகள் (Tank Valve & Fittings) பழுதடைந்துள்ளதால், அதையும் புதியதாக மாற்றி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குளோரினேஷன் செல்லும் குழாய்கள் (Hose) அனைத்தும் பழுதடைந்துள்ளது. மற்றும் பேனல் போர்டுகளில் உள்ள ஒயரிங் அனைத்தும் பழுதடைந்துள்ளால், அதனையும் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. மேலும், புதியதாக இரண்டு விநியோக குழாய்கள் அமைப்பதற்கு, 2 Way SS Valve அமைக்கப்பட வேண்டியுள்ளது. டப்ளான் ஹெட் செட் மாற்றப்பட வேண்டியுள்ளது.

மேற்காணும் குடிநீர் குளோரின் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருதி விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ. 80,000/- (ரூபாய் என்பதாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று மூன்று விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3578 / 2018 / இ1)**

பொருள் எண்–25

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **குடி□□ □னி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 08.10.2018 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின்பெயர்** | **விலைப்புள்ளிதாரர் பெயர்** | **விலைப்புள்ளி விவரம்** |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி ஏமப்பேர் நீருந்து நிலையத்தில் அமைந்துள்ள திரவ குளோரினேஷன் சாதனத்தினை பழுது நீக்கம் செய்தல் | M/s. SHRI BALAJI AND COMPANY, Salem-636302 | குறைவான விலைப்புள்ளி |
| | | M/s. VASU CHEMICAL INDUSTRIES, Chennai-600097 | அதிகமான விலைப்புள்ளி |
| | | M/s. SRI RAJAGANAPATHY CHEMICALS, Salem-636302 | அதிகமான விலைப்புள்ளி |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில், குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள "M/s. SHRI BALAJI AND COMPANY, Salem-636302" என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை, குடிநீர் விநியோக பணியின் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3578 / 2018 / இ1)**

பொருள் எண்–26

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்நகராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்கள் / பிரதான குழாய்கள் மற்றும் நேரடியாக சிறுமின் விசைப்பம்பிலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்கள் கீழ்க்காணும் இடங்களில் பழுதடைந்து குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது.

1. கச்சிராயபாளையம் சாலை (வார்டு எண். 03)
2. அரசு மருத்துவமனை அருகில் (வார்டு எண். 03)
3. அரசு மருத்துவமனை முன்புறம் (வார்டு எண். 03)
4. காந்தி சாலை ஊ.ஒ.பள்ளி முன்புறம் (வார்டு எண். 03)
5. கச்சிராயபாளையம் சாலை ஏ.எல்.சி. சர்ச் முன்புறம் (வார்டு எண். 03)
6. ஏமப்பேர் ஏரிக்கரை (வார்டு எண். 15)
7. சேலம் பிரதான சாலை (வார்டு எண். 14)

மேற்காணும் பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய்களை பழுது நீக்கம் செய்திடவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச தொகை ரூ. 45,000/- (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று மூன்று விலைப்புள்ளிகள் பெற்று பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2018 / இ1 )**

பொருள் எண்—27

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான சேலம் பிரதான சாலையில் உள்ள குளக்கரை கடைகள் 1 முதல் 10 வரை உள்ள கடைகளை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதியதாக கடைகள் கட்டி முடிக்கப்பட்டு பொதுஏலம் நடத்தப்பட்ட நிலையில் ஏற்கனவே உள்ள கடைகளின் குத்தகைதாரர் 9 நபர்களுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்து தரக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். 557 முதல் 565 / 2011ல் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி வழக்கில் ஏலம் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலத்தில் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்பட்ட நிலையில் 9 கடை குத்தகைதாரர்கள் டெல்லி உச்சநீதிமன்றத்தில் வழக்கு எண். 1935/15 முதல் 1941/15, (SLP (C) 32780 முதல் 32788) வரையுள்ள எண்களில் வழக்கு தொடர்ந்துள்ளர். மேற்படி குத்தகைதாரர்களுக்கு 9 கடைகள் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்ட நிலையில் இந்நகர் மன்றம் தீர்மானம் எண். 1015/15 நாள் 30.4.2015ல் வைப்புதொகையாக ரூ.10,00,000/— மாதாந்திர வாடகை ரூ.25,000/—ம் அத்துடன் சேவைவரி சேர்த்து கடைகள் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கிற்கான கட்டணம் ரூ.3,34,800/— யை வழங்ககோரி திரு. B. பாலாஜி, அரசு வழக்கறிஞர், உச்சநீதிமன்றம், டெல்லி அவர்கள் கொடுத்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வழக்கு கடந்த 2011 முதல் நடைப்பெற்று முடிவு பெற்ற நிலையில் மேற்படி வழக்குக்கான கட்டணம் நாளது தேதி வரை வழங்கப்படவில்லை என்பதால் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று வழக்குக் கட்டணத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1734/18/அ1)**

பொருள் எண்—28

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **குடி□□□னி 2018-2019-ம்** ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 12.09.2018 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின்பெயர் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி வார்டு எண். 19, மந்தைவெளி திறந்தவெளி கிணற்றில் புதியதாக மின் மோட்டார் இறக்குதல் | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.68 % குறைவான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள். ஸ்ரீ அம்மன், கள்ளக்குறிச்சி | 2.45% அதிகமான விலைப்புள்ளி |
| | | திரு. K.V.கண்ணன், கள்ளக்குறிச்சி | 1.03% அதிகமான விலைப்புள்ளி |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில், 1.57 %-க்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள **"திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி"** என்பவரின் விலைப்புள்ளியினை, குடிநீர் விநியோக பணியின் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3367 / 2018 / இ1)**

பொருள் எண்–29

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **குடி□□ □னி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 12.09.2018 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்தல் | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | குறைவான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள். ஸ்ரீ அம்மன், கள்ளக்குறிச்சி | அதிகமான விலைப்புள்ளி |
| | | திரு. K.V.கண்ணன், கள்ளக்குறிச்சி | அதிகமான விலைப்புள்ளி |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில், குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள **"திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி"** என்பவரின் விலைப்புள்ளியினை, குடிநீர் விநியோக பணியின் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3368 / 2018 / இ1)**

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**